ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1653/14 - 2010 මැයි 12 වැනි බදාදා - 2010.05.12
*1653/14 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## *காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : மஹ/3/316/ஏரீஎச்.
காணி அமை. குறிப்பு இல. : எல்டீ/05/2008/ந.அ.அ.ச/05.

1964 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட காணி சுவீகரிப்புச்சட்ட இல. 28 பிரிவு 7 உப பிரிவு (1) இன் கீழ் கீழ்க்காணும் காணியினை பொதுப் பாவனைகளுக்காக அரசாங்கம் சுவீகரிக்க எண்ணியுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தருகிறேன்.

சுவீகரிப்பிற்கான காணியின் விபரம் : மாதிரிப்படம் : பீபீ கொ : 9104

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலகப் பிரிவு, தெபானம கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹதெனிய/நுககஹலந்த/ஜிஞ்சஹேன என்றழைக்கப்படும் காணித்துண்டு.

**துண்டு இல. 01**
காணியின் பெயர் : ஜிஞ்சஹேன ; விபரம் : இறப்பர் காணி ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : எல். டி. எஸ். சமரசிங்ஹ, இல. 121, தெபானம, பன்னிப்பிட்டி ; விஸ்தீரணம் : 3.2047 ஹெக்டயார்ஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி மு. ப. 09.00 மணிக்கு மஹரகம பிரதேச செயலகத்தில் என்னைச் சந்திக்கக்கடமைப் பட்டுள்ளீர்கள். அத்துடன் 2010ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி அன்றோ அதற்கு முன்போ எழுத்தில் இரு பிரதிகளாக காணியில் உள்ள அக்கறையின் தன்மை, குறிப்பிட்ட காணியின் சுவீகரிப்பிற்கான நட்டஈடு கோரிக்கையின் விபரங்கள், நட்டஈட்டின் தொகை அத்துடன் அப்படியான நட்டஈட்டுத் தொகையின் விபரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

சந்திரரத்ன பல்லேகம,
பிரதேச செயலாளர்,
மஹரகம.

பிரதேச செயலகம்,
மஹரகம,
2010.05.12.

05 - 679